بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 20/09/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

- **‘லி(க்)கா’ எனும் இறை சந்திப்பில் சில சமயங்களில் மனித ஆற்றல்களை விட மேலானதாகத் தெரிகின்ற விஷயங்களும் மனிதன் மூலமாக வெளிப்படுகின்றன. இறை ஆற்றல்களை அவை தமக்குள் வைத்திருக்கின்றன.**
- **அகழ்ப் போர் பற்றிய குறிப்பில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾

صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அகழ்ப் போர் தொடர்பாக கூறப்பட்ட போது அதில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை தொடர்பாக கூறப்பட்டது. உணவில் பரக்கத் ஏற்பட்டது தொடர்பான அற்புதம் பற்றி கடந்த குத்பாவில் நான் கூறினேன். அதேபோன்று பேரீத்தம் பழங்களில் பரக்கத் ஏற்பட்ட சம்பவமும் காணக் கிடைக்கிறது. ஹஸ்ரத் பஷீர் பின் சஅது (ரலி) அவர்களின் மகள் அறிவிக்கிறார்கள்: என் தாயார் எனது ஆடையில் கொஞ்சம் பேரீத்தம் பழங்களை வைத்து, இதை உம் தந்தையிடமும் மாமாவிடமும் கொடுத்து இது உங்களுக்கான காலை உணவாகும் என்று கூறிவிடு என்றார்கள். நான் அந்தப் பேரீத்தம் பழங்களை வாங்கிக் கொண்டு சென்றேன். என் தந்தையையும் மாமாவையும் தேடியவாறு பெருமானார் (ஸல்) அவர்களைக் கடந்து சென்ற போது, சிறுமியே! உன்னிடம் என்ன பொருள் உள்ளது என்று அன்னார் கேட்டார்கள். இது பேரீத்தம் பழங்கள் ஆகும் என்று கூறினேன். அதை என்னிடம் கொடுத்துவிடு என்று அன்னார் கூறினார்கள். நான் அந்தப் பேரீத்தம் பழங்களை அன்னாருடைய இரு கைகளிலும் வைத்து விட்டேன். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் பேரீத்தம் பழங்களை ஒரு துணியில் வைத்து அதை இன்னொரு துணியைக் கொண்டு மூடினார்கள். மக்களை உணவுக்காக அழையுங்கள் என்று ஒரு நபரிடம் கூறினார்கள். ஆகவே அகழ் தோண்டக்கூடிய அனைவரும் வந்து கூடி அந்தப் பழங்களை சாப்பிட ஆரம்பித்தார்கள். அந்தப் பேரீத்தம் பழங்கள் அதிகரித்துக் கொண்டே சென்றன. எந்த அளவுக்கென்றால் அனைவரும் உண்டு முடித்த பின்பும் கூட துணியின் ஓரத்தில் இருந்து பேரீத்தம் பழங்கள் கீழே விழுந்து கொண்டிருந்தன.

***உணவில் பரக்கத் ஏற்பட்டது தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இன்னொரு சம்பவத்தை எடுத்துக் கூறிய பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் எடுத்துரைத்த ‘சாலிக்’ எனும் இறை அடியார்களின் அந்தஸ்தை பற்றியும் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ‘லி(க்)கா’ எனும் இறை சந்திப்பின் அந்தஸ்தை பற்றியும் எடுத்துரைத்தார்கள்.***

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ‘அவர்கள் எந்த அளவுக்கு இறை நெருக்கத்தைப் பெற்று விடுகிறார்கள் என்றால், நெருப்பு இரும்பின் பண்பைத் தனக்குள் எந்த அளவு மறைத்து வைத்துக் கொள்கிறது என்றால் வெளிப்படையாக பார்க்கும் போதும் கூட அது நெருப்பாகத்தான் தெரிகிறது; வேறு ஒன்றும் தென்படுவதில்லை. இந்த ‘லி(க்)கா’ எனும் இறை சந்திப்பில் சில சமயங்களில் மனித ஆற்றல்களை விட மேலானதாகத் தெரிகின்ற விஷயங்களும் மனிதன் மூலமாக வெளிப்படுகின்றன. இறை ஆற்றல்களை அவை தமக்குள் வைத்திருக்கின்றன. உதாரணமாக, நம்முடைய தலைவரும் எஜமானரும் தூதர்களின்

தலைவரும் நபிமார்களில் சிறந்தவருமான நபி (ஸல்) அவர்கள் பத்ர் போரில் கையளவு கற்களை காஃபிர்கள் மீது எறிந்தார்கள். கையளவு எறியப்பட்ட அது எவ்வித துஆவின் மூலமாகவும் எறியப்படவில்லை; மாறாக அது ஆன்மிக ஆற்றலினால் எறியப்பட்டிருந்தது. அது இறை ஆற்றலை வெளிப்படுத்தியது. எதிரி படையின் மீது எவ்வாறான அசாதாரண தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், அவர்களில் ஒவ்வொருவருடைய கண்ணின் மீதும் அது பாதிப்பை ஏற்படுத்தியது. இவ்வகையான எவ்வளவோ அற்புதங்களைப் பெருமானார் (ஸல்) அவர்கள் தனிப்பட்ட ஆற்றலின் மூலமாக காட்டி இருக்கிறார்கள். அவற்றுடன் எந்த துஆவும் இருக்கவில்லை.'

அகழ் தோண்டப்படும் போது பல முனாஃபிக்கள் பெருமானார் (ஸல்) மற்றும் முஸ்லிம்களுடன் சேர்ந்து வேலை செய்வதிலிருந்து சோம்பேறித்தனம் காட்டி வந்தார்கள். அவர்கள் கொஞ்சம் வேலை செய்வார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்களிடம் கூறாமல், அனுமதி வாங்காமல் வீட்டுக்கு நழுவிச் சென்று விடுவார்கள். முஸ்லிம்களில் எவருக்காவது ஏதேனும் தேவைக்காக செல்ல வேண்டியது வந்தால் அவர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்பார். பெருமானார் (ஸல்) அவர்கள், அவருக்கு அனுமதி கொடுத்து விடுவார்கள்.

அபூ சுஃப்யான் அவர்களின் படை வந்தடைவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே அகழ் ஆயத்தமாகிவிட்டதாக அறிவிப்பில் வருகிறது. திட்டமிட்டபடி, பிள்ளைகளும் இளம் வயதினரும் பெண்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த கோட்டைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். ஆயினும் எவர்கள் 15 வயதை எட்டி இருந்தார்களோ அவர்கள் விரும்பினால் இங்கு இருக்கலாம்; விரும்பினால் கோட்டைகளுக்குத் திரும்பிச் செல்லலாம் என்று அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவில் தம் பிரதிநிதியாக இப்னு உம்மு மக்தூம் (ரலி) அவர்களை நியமித்தார்கள். அகழுக்கு அருகில் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக தோலினால் ஆன கூடாரம் அமைக்கப்பட்டது. முஹாஜிர்களின் கொடி ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களுக்கும் அன்ஸாருடைய கொடி ஹஸ்ரத் சஅது பின் உபாதா (ரலி) அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

முஸ்லிம்களின் எண்ணிக்கையைக் குறித்து வரலாற்றாசிரியர்கள் கடும் கருத்து வேறுபாடை கொண்டுள்ளனர். அந்த எண்ணிக்கை 700 லிருந்து 3000 வரை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் முழுமையான அகப்பார்வையுடன் இந்த அனைத்து அறிவிப்புகளுக்கிடையிலும் பொருத்தத்தை நிரூபித்தவாறு எடுத்து கூறுகிறார்கள்:** இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம் படைவீரர்களின் எண்ணிக்கையைக் குறித்து வரலாற்றாசிரியர்களிடத்தில் கடும் கருத்து வேறுபாடு நிலவுகிறது. சிலர் அந்தப் படையினரின் எண்ணிக்கை 3000 என்று எழுதி இருக்கிறார்கள். சிலர் 1200 என்றும், சிலர் 700 என்றும் எழுதி இருக்கிறார்கள். அகழ்ப் போர் மூன்று பகுதிகளாக இருந்தது. ஒன்று, எதிரி மதீனாவுக்கு முன்னால் வந்திருக்காத நேரமாகும். அப்போது அகழ் தோண்டப்பட்டு கொண்டிருந்தது. அந்தப் பணியில் குறைந்தபட்சம் மண்ணை சுமந்து செல்லக்கூடிய தொண்டுகளைப் பிள்ளைகளாலும் செய்ய இயலும்! சில பெண்களாலும் இந்தப் பணிகளில் உதவி செய்திருக்க முடியும்! ஆகவே அகழ் தோண்டப்பட்டு கொண்டிருக்கும் போது முஸ்லிம்களின் எண்ணிக்கை 3000 ஆக இருந்தது. பிறகு எதிரி வந்தடைந்த போது, போர் ஆரம்பித்தபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் 15 வயதிற்குட்பட்ட அனைத்து சிறுவர்களையும் செல்லுமாறு கட்டளையிட்டார்கள். எவர்கள் 15 வயதை அடைந்திருந்தார்களோ அவர்கள் விரும்பினால் இருக்கலாம்; இல்லையென்றால் செல்லலாம் என்று அனுமதி வழங்கப்பட்டது.

இந்த அறிவிப்பில் இருந்து தெரிய வருவது என்னவென்றால், அகழ் தோண்டும் போது முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்துள்ளது. போரின் போது குறைந்துவிட்டது. 1200 என்ற எண்ணிக்கை போர் ஆரம்பித்த பிறகு உள்ள எண்ணிக்கை ஆகும். போரின்

போது பனூ குறைஸா (எனும் யூத கோத்திரம்) காஃபிர் படையுடன் சேர்ந்து கொண்டது. திடீரென்று மதீனாவின் மீது தாக்குதல் நடத்த அவர்கள் எண்ணம் கொண்டிருந்தார்கள். மதீனாவின் எந்த திசையில் பனூ குறைஸா இருந்தார்களோ அந்த திசையையும் கண்காணிக்க வேண்டியது அவசியம் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கருதினார்கள். வரலாற்றில் இருந்து தெரிய வருவதென்னவென்றால், அச்சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிம் பெண்களின் பாதுகாப்பிற்காக இரு படைப்பிரிவுகளை அனுப்பி வைத்தார்கள். ஒரு படைப்பிரிவில் 200 வீரர்களும் இன்னொன்றில் 300 வீரர்களும் இருந்தார்கள். 1200 படை வீரர்களில் 500 படைவீரர்கள் பெண்களின் பாதுகாப்புக்காக அனுப்பி வைக்கப்பட்ட பிறகு 1200 என்ற எண்ணிக்கை இப்போது 700 ஆக மாறியிருந்தது.

அபூ சுஃப்யான் அவர்களின் தலைமையில் (பல) கோத்திரங்களைச் சேர்ந்த படை மதீனா வந்தடைந்து அகழுக்கருகில் முகாமிட்டது. இதைக் குறித்து **ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்:** காஃபிர்களின் படை மதீனாவுக்கு அருகில் வந்தடைந்தபோது தனக்கு முன்னால் அகழ் இருப்பதைக் கண்டு திகைப்படைந்து விட்டது. ஆகவே அவர்கள் அகழைச் சுற்றி முற்றுகையிடும் வகையில் முகாமிட்டார்கள். மேலும் அகழ் தோண்டடப்பட்டிருந்த இடங்களில் பலவீனமான பகுதிகளைக் கண்டறிந்து அவற்றிலிருந்து பயன்பெறுவதற்கு சந்தர்ப்பங்களைத் தேடிக் கொண்டிருந்தார்கள். அகழைக் கடப்பதில் எதிரிகள் வெற்றியடையாதபோது சூழ்ச்சிகளைக் கையாளத் துவங்கினார்கள். மதீனாவுக்குள் இருக்கும் யூத கோத்திரமான பனூ குறைஸாவிடம் சென்று, அவர்கள் முஸ்லிம்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை முறிக்கச் செய்து அவர்களை நம்முடன் இணைத்துவிட வேண்டும். அவர்கள் உள்ளே இருந்து கொண்டு முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்று முஷ்ரிகள் தமக்குள் தீர்மானித்துக் கொண்டார்கள். ஆகவே இந்த அபாயகரமான சூழ்ச்சியை செயல்படுத்துவதற்காக ஹுயய் பின் அக்தப் பனூ குறைஸாவுடைய தலைவனான கஅப் பின் அஸதிடம் சென்றான். ஆரம்பத்தில் கஅப், ஹுயய் வந்திருக்கும் செய்தியைக் கேள்விப்பட்டு கோட்டையின் கதவுகளைக் கூட திறக்கவில்லை. அத்துடன் ஹுயய்யிடம், நான் முஹம்மது (ஸல்) அவர்களுடன் உடன்படிக்கை செய்திருக்கிறேன். நான் அந்த உடன்படிக்கையை முறிக்க முடியாது. முஹம்மது (ஸல்) அவர்களை எப்பொழுதும் உடன்படிக்கையைப் பேணக் கூடியவராகவும் நான் கண்டுள்ளேன் என்று தெளிவாக பதிலளித்தான். ஆனால் ஹுயய் விடாமல் தொடர்ச்சியாக வலியுறுத்தியதன் காரணமாக இறுதியில் கஅப் கதவை திறந்து விட்டது மட்டுமின்றி, ஹுயய் உடைய தூண்டுதலின் காரணமாக முஸ்லிம்களுக்கெதிரான அந்த பயங்கரமான சூழ்ச்சியிலும் கலந்து கொண்டு முஸ்லிம்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை முறித்துக் கொண்டான்.

இந்த சந்தர்ப்பத்தில் பனூ குறைஸாவைச் சார்ந்த நல்லியல்பு கொண்ட சில யூதர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்று இஸ்லாத்தை ஏற்றும் கொண்டார்கள். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் மூலமாக பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பனூ குறைஸா ஒப்பந்தத்தை முறித்த செய்தி கிடைத்தபோது அன்னார், சஅது பின் முஆஸ் (ரலி) மற்றும் சஅது பின் உபாதா (ரலி) ஆகியோரை சில சஹாபிகளுடன் அனுப்பி வைத்தார்கள். நமக்குக் கிடைத்த தகவல் உண்மையானது என்றால் மக்களுக்கு முன்னால் பகிரங்கமாக அதை நீங்கள் கூற வேண்டாம். மாறாக நான் அறியும் வகையில் சூசகமாக கூறுங்கள் என்றும் வழிகாட்டியிருந்தார்கள். இந்தக் குழு பனூ குறைஸாவிடம் சென்ற போது கஅப் பின் அஸது அவர்களுடன் மிகவும் இளக்காரமாக நடந்து கொண்டான். உடன்படிக்கை செய்ததை முற்றிலும் மறுத்து விட்டான்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** அந்தப் பேறிழந்தவன் (அதாவது, கஅப் பின் அஸத்) அக்குழுவை மிகவும் ஆணவத்துடன் சந்தித்தான். இரு சஅதுகள் சார்பாகவும் ஒப்பந்தத்தைக் குறித்து நினைவூட்டப்பட்ட போது அவனுடைய குலத்தார் ஆணவத்துடன், நீங்கள் திரும்பிச் செல்லுங்கள்! எங்களுக்கு

உங்களுடன் எவ்வித ஒப்பந்தமும் இல்லை என்று கூறினார்கள். கஅப் பின் அஸத் உடைய பதிலைக் கேட்ட இக்குழு அங்கிருந்து கிளம்பி வந்து பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி பனூ குறைஸா ஒப்பந்தத்தை முறித்தது தொடர்பாக பொருத்தமான முறையில் தகவல் அளித்தார்கள்.

தளர்ச்சி அடைய வைக்கக்கூடிய, உணர்வுகளை இழக்கச் செய்யக்கூடிய இவ்வாறான சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் கொஞ்ச நேரம் வரை மௌனமாக இருந்தார்கள். இந்தச் செய்தியினால் அன்னார் மீது எவ்வித தாக்கமும் ஏற்படவில்லை. இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் சாதாரண மனிதன் துவண்டு போய் விடுவான். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களோ, 'நம்பிக்கை கொண்டோரின் ஜமாஅத்தே! அல்லாஹ்வின் உதவி மற்றும் ஆதரவைக் கண்டு மகிழ்ச்சி அடையுங்கள். ஒரு நேரம் வரும், அப்பொழுது நான் கஅபாவை வலம் வந்து கொண்டிருப்பேன். அதனுடைய திறவுகோல்கள் என் கைகளில் இருக்கும். கிஸ்ராவும், கைஸரும் நிச்சயமாக அழிந்து போவார்கள். அவர்களின் செல்வங்கள் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யப்படும். நான் இவற்றை உறுதியாக நம்புகிறேன்' என்று கூறினார்கள்.

*அகழ்ப் போர் தொடர்பான விபரங்கள் இனி வரும் காலங்களிலும் தொடரும் என்று கூறிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இன்றிலிருந்து குத்தாமுல் அஹ்மதிய்யாவின் இஜ்திமாவும் ஆரம்பிக்கின்றது. குத்தாம் இதிலிருந்து முழுமையாக பயனடைய முயற்சி செய்யுங்கள். ஒருவேளை தொடர்ச்சியாக மழை பெய்து வரலாம் என்று வானிலை குறித்து முன்னறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் அல்லாஹ் அருள் புரிவானாக! அவர்களின் நிகழ்ச்சிகள் அனைத்தும் நல்லபடியாக நடக்கட்டுமாக! குத்தாம் இந்நாட்களில் ஆன்மிக மற்றும் மார்க்கக் கல்வியின் தரங்களை அதிகரிப்பதற்கும் முயற்சி செய்யுங்கள். எந்த துஆக்களின் பக்கமும் துரூது ஓதுவதின் பக்கமும் நான் கவனமூட்டினேனோ அதன் பக்கமும் இந்நாட்களில் குறிப்பாக கவனம் செலுத்துங்கள். மேலும், எப்பொழுதும் அதை ஓதி வாருங்கள்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நான்கு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பதாகவும் அறிவித்தார்கள்.*

(1) ரப்வாவைச் சேர்ந்த, வாழ்வை அர்ப்பணித்த மதிப்பிற்குரிய ஹபீபுர் ரஹ்மான் ஸீர்வி சாஹிப். மர்ஹூம் அவர்கள் வஃபாத் ஆகும்போது நாயிப் நாஸிர் தீவான் ஆக தொண்டாற்றும் நல்வாய்ப்பைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். (2) Brigadier டாக்டர் மர்ஹூம் ஸியாவுல் ஹஸன் சாஹிபுடைய மகனாகிய டாக்டர் ஷேக் ரியாஸுல் ஹசன் சாஹிப். மர்ஹூம் அவர்கள் வாழ்வை அர்ப்பணித்தவர் என்ற முறையில் ஏறக்குறைய 20 வருடங்களை விடவும் அதிகமான காலகட்டம் ஆப்ரிக்கா மற்றும் பாகிஸ்தானில் மனித குலத்திற்குத் தொண்டாற்றக்கூடிய நல்வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். (3) ரப்வாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய பேராசிரியர் அப்துல் ஜலீல் சாதிக் சாஹிப். மர்ஹூம் அவர்கள் வஃபாத் ஆகும்போது சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் தர்பிய்யத் மற்றும் ரெக்கார்டு துறையின் இன்சார்ஜ் ஆக (நாயிப் நாஸிர் ஆக) தொண்டாற்றும் நல்வாய்ப்பைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். (4) ஜங்க் (Jhang) ஐச் சேர்ந்த மதிப்பிற்குரிய மாஸ்டர் முனீர் அஹ்மத் சாஹிப். மர்ஹூம் அவர்கள் நீண்ட காலமாக பல்வேறு ஜமாஅத் தொண்டுகளை செய்வதற்கான நல்வாய்ப்பைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். கைதிகளின் நலனுக்காக குறிப்பிடத்தக்க தொண்டுகளை செய்யக்கூடிய நல்வாய்ப்பையும் பெற்றுள்ளார்கள்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)